# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.187/2021</u>

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 19–ஆம் நாள் செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய எ.**ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம். (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வமுருகன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் 1–ம் எதிர்மனுதாரர் உரிமையளார் மற்றும் வாகன ஓட்டுநர். நான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். 03.07.2021 அன்று மதியம் 11.00 மணிக்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் TN 46 Z 7947 என்ற வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். விபத்து நடந்தது திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலை ரோடு. நான் திருச்சியிலிருந்து சென்னை நோக்கி சென்றேன். விபத்து நடந்தது துறைமங்கலம் National ITI அருகில் உள்ள சர்வீஸ் ரோடு ஆகும். எதிரில் இருசக்கர வாகனம் வந்தது. அவர் மதுபோதையில் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்தார். அவர் தலைகவசம் அணியவில்லை. விபத்திற்கு எதிரில் வந்த இருசக்கர வாகன ஓட்டுநர் தான் காரணம். போலீசார் எதிரில் வந்த இருசக்கர வாகன ஓட்டுநர் இறந்துவிட்டதால் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. விபத்திற்கு நான் காரணம் அல்ல. விபத்தில் எனக்கும் காயம் ஏற்பட்டது.

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.**

**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

சென்னையிலிருந்து திருச்சி செல்வதற்கு ஒரு அணுகு சாலை உள்ளது. அந்த சாலை ஒரு வழி பாதை என்றால் சரிதான். பாலம் தாண்டி திருச்சியிலிருந்து சென்னை செல்வதற்கும் ஒரு அணுகு சாலை உள்ளது. திருச்சியிலிருந்து சென்னை செல்பவர்கள் அந்த அணுகு சாலையில் தான் செல்வார்கள். நான் தவறான திசையில் வந்தேன் என்றால் சரியல்ல. நான் தவறான திசையில் வந்ததால் என்னால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மாற்று வழி பாதையில் சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் புகார் கொடுக்கவில்லை. நான் தவறுதலாக ஓட்டியதால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும், அஜாக்கிரதையும் காரணம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நஷ்டஈடு கொடுக்க கூடாது என்பதற்காக மது அருந்தியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் தலைகவசம் அணிந்திருந்தார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.